சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 11.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | வீரபரஞ்சோதி |
| தந்தை பெயர் | : | வைரக்கண்ணு |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் ஓய்வு |
| வயது | : | 63 |

2026 ம் ஆண்டு மே மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை:**

குற்ற எண்.912/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 1ம் எதிரி நடராஜன் என்பவர் அன்றைய தினமே அதாவது 17.05.2020 ஆம் தேதி அன்றே மருத்துவமனையில் உள்நோயாளியாக அதே மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக கிடைந்த தகவலின் அடிப்படையில் நான் மருத்துவமனைக்கு சென்று 1ம் எதிரி நடராஜன் என்பவரிடம் ஒரு புகார் வாக்குமூலம் பெற்று வந்த அதன் பேரில் எங்களுடைய காவல் நிலைய குற்ற எண். 911/2020 என்ற எண்ணில் இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2), 307 உ/இ 3(1) தமிழ்நாடு பொது சொத்திற்கு சேதம் அளித்தல் சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்று சொன்னால் ஆமாம். அந்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை **எ.ம.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் எதிரிகளாக சூரியா (அ.சா1), கேசவன், பாலா, முத்து, ராமன், ஜயப்பன், சபரி, சசிகலா, சுமதி(அ.சா-2), பார்வதி, அன்னகிளி ஆகியோர்கள் கடந்த 16.05.2020 ஆம் தேதி மாலை 3.50 மணியளவில் தன்னையும், தனது மகன் கங்காதரன் (2ம் எதிரி), மருமகள் நிவேதித்தா, தனது மனைவி சாந்தி தாக்கியுள்ளதாக எ.ம.சா.ஆ-3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். அ.சா.ஆ-7 ஆன முதல் தகவல் அறிக்கையிலும், எ.ம.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவ நாள், இடம், ஒன்று என்று சொன்னால் ஆமாம். சம்பவ நேரம் ஒன்று என்று சொன்னால் இல்லை. அ.சா.ஆ-7 ன் படி சம்பவ நேரம் மாலை 4.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ-3 ன் படி சம்பவ நேரம் என்பது மாலை 3.50 என்று சொன்னால் சரிதான் ஆக இந்த 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் பேரிலான சம்பவம் தான் முதலில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக சொன்னால் சரிதான்.

**<u>அரசு தரப்பில் அனுமதியுன் பேரில் மறு விசாரணை</u>**

அ.சா-1 மற்றும் 1ம் எதிரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக எங்கள் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்று சொல்லமுடியுமா என்றால் காலை 9.00 மணிக்கு தகவல் கிடைத்தது. இதில் யாருடைய தகவல் முன்பாக கிடைக்கப்பெற்றது என்றால் இரண்டு நபர்களின் தகவலும் ஒரே நேரத்தில் தான் கிடைக்கப்பெற்றது. சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்று சொன்னால் ஆமாம். எனது அதிகாரிகள் விசாரணை மேற்கொள்ளும் போது தான் சம்பவ நடந்த நேரம் சரியான நேரம் எப்போது என்று தெரியும் என்று சொன்னால் சரிதான். ஒருவர் தன் மீதான வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக ஒரு பொய்யான புகார் கூட கொடுக்கலாம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம் செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.11 18:12:44 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.